2004 பிப்ரவரி 13]

கீழப்பாவூர் ஒன்றியம், சுரண்டை பேரூராட்சி, பாவநாசபுரம், அம்மையாபுரம், ஆனைகுளம் ஆகிய கிராமங்களுக்கு இயங்கிக் கொண்டிருந்த வழித்தடம் எண் 13ஏ, 10 ஆகிய பேருந்துகள் நிறுத்தப்பட்டதை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எதிர்பாராதவிதமாக ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஏற்பட்ட சில சுற்றுக்கள் இழப்பு நீங்கலாக தடம் எண் 13ஏ மற்றும் தடம் எண் 10 ஆகியவை தடத்தில் முறையாகவே இயக்கப்பட்டு வருகின்றன. வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும் இவ்வழித்தடங்களில் பேருந்து இயக்கம் நிறுத்தி வைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 73, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

73—

காகித ஆலை

***17243—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி பகுதியில் கிடைக்கும் வைக்கோலை மூலப் பொருளாகக் கொண்டு காகித ஆலை துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி பகுதியில் வைக்கோலை மூலப்பொருளாகக் கொண்டு காகித ஆலை அமைக்கும்

திட்டத்திற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 74, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

74—

கால்நடை மருந்தகம்

***13208—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில், மூலனூர் ஒன்றியம், கன்னிவாடியில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 75, திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

75—

கால்நடை மருந்தகக் கட்டடம்

***18979—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி ஒன்றியம், கே.ஜீ. கண்டிகை கிராமத்திலுள்ள கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டப்படுமா?